உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12 கூட்டுறவு (குறுக்கீடுகள்) உட்காருங்கள். I say, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்–குன்–குன்யா நோயால் எனது தொகுதியில் நூர்ஜஹான் என்ற ஒரு பெண் . . .

(ஆ) இலங்கை ஆயுதப் படை அதிகாரிகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள்மீது சிங்கள இராணுவம் போர் விமானங்கள் மூலமும், தரைவழிப் படைகள் மூலமும் தாக்குதலைத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்த நிலையில் இலங்கை ஆயுதப் படையைச் சேர்ந்த 54 அதிகாரிகளுக்கு கோவையில் உள்ள மத்திய பாதுகாப்புப் படை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் சிங்களப் படைக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதை எப்படி மத்திய அரசு அனுமதித்திருக்கின்றது? இந்தச் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் உள்ளது. உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, நாங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

2006 ஆகஸ்ட் 2]

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களுடைய அந்தக் கேள்வியிலே ஒரு திருத்தம். தமிழ்நாட்டில் பயிற்சி கொடுப்பதை எப்படி மத்திய அரசு அனுமதித்துக்கொண்டிருக்கிறது என்று கேட்டார். பயிற்சி கொடுப்பதற்கு அனுமதித்ததே மத்திய அரசுதான். தமிழ்நாட்டிலே பயிற்சி கொடுக்க நாங்கள் யாரும் அவர்களை அழைக்கவில்லை, அனுமதிக்கவும் இல்லை. இந்தப் பிரச்சினை இங்கே எழுந்ததை வைத்து மத்திய அரசு இதில் கவனம் செலுத்தும் என்று நான் நம்புகின்றேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து கவன ஈர்ப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு கடிதங்கள் மூலமாகத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். காலதாமதமானதையொட்டி, அவர்கள் சபையில் கேள்வி எழுப்பினால், அவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் தெரிந்துகொண்டு அதற்குரிய பதிலைச் சொன்னால் பரவாயில்லை. அவர்கள் எழுந்தவுடனே "உட்காருங்கள், உட்காருங்கள்" என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினருடைய உரிமை முழுவதுமாகப் பறிக்கப்படுகிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, துறைகளுக்கு அனுப்பப்பட்டு பதில்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றிச் சொல்வது (குறுக்கீடுகள்)— என்னுடைய right-ஐப்பற்றி claim பண்ணுவதற்கு you have no right. Sit down. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) You have no right.